Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 17.8.2026/Script.

# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்—நாராயணசாமி
தேதி 17.8.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- சுயமாக சிந்தப்பதும் அணியாக செயல்படுவதுமே, கல்வியின் சரியான அளவீடுகள் என்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

- வங்கித் துறையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆராய, உயர் அதிகாரக் குழு, விரைவில் அமைக்கப்படும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- பிரதமர் அறிவித்துள்ள சக்தியின் 7 தாரைகள், வேளாண் வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் முக்கிய வழிகாட்டியாக அமையும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறி உள்ளார்.

- சோலைநகர் அரசு சிபிஎஸ்இ தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள் மற்றும் வழிபாட்டு கூடத்தை, முதலமைச்சர் திருரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

## ராதாகிருஷ்ணன்

சுயமாக சிந்தப்பதும் அணியாக செயல்படுவதுமே, கல்வியின் சரியான அளவீடுகள் என்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார். 2020-ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையில், இந்த அம்சங்களுக்கே முக்கியத் துவம் அளிக்கப் பட்டுள்ளதாக, இன்று திருவாரூர் மத்திய பல்கலைக்

கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் அவர் கூறினார். 2014-ஆம் ஆண்டிற்கு பின்னர் நாட்டில், 16 ஐஐடி, 12 எய்ம்ஸ் உட்பட பல்வேறு உயர் கல்வி நிறுவனங்கள், புதிதாக நிறுவப் பட்டுள்ளதாகவும் உயர்கல்வித் துறையில் இவ்வளவு பெரிய விரிவாக்கத்தை, முன் எப்போதும் நாடு கண்டதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

## மோடி-வாழ்த்து

பாரதிய ஜனதா கட்சியில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள, தேசிய நிர்வாகிகளுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இவர்களின் ஆற்றலும் அமைப்பு சார்ந்த அனுபவமும், கட்சிக்கும் அடித்தட்டு மக்களுக்கும் இடையிலான இணைப்புகளை வலுப்படுத்துவதாக அமையும் என சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார். முன்னதாக பிஜேபி தலைவர் திரு நிதின் நபீன், தேசிய அளவிலான கட்சியின் புதிய நிர்வாகிகள் பட்டியலை, புதுடெல்லியில் அவர் இன்று இதை அறிவித்தார். இதன்படி, திருமதி வசுந்தரா ராஜே சிந்தியா, திரு ராம் மாதவ், திரு ரேகா வர்மா உட்பட 13 பேர், பாரதிய ஜனதா கட்சியின் தேசிய துணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல், கட்சியின் தேசிய பொருளாளராகவும், திரு பி எல் சந்தோஷ், கட்சியின் தேசிய அமைப்புச் செயலராகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். திரு வினோத் தாவ்டே, திரு சுனில் பன்சால், திருமதி ஸ்மிரிதி இரானி உட்பட 8 பேர், கட்சியின் தேசிய பொது செயலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பிஜேபி இளைஞர் அணியின் தலைவராக டாக்டர் ஹேமங் ஜோஷி, மகளிர் அணித் தலைவராக திருமதி ரூப்குமார் சவுத்ரி, விவசாயிகள் அணித் தலைவராக திரு பன்சிலால் குர்ஜார் ஆகியோர் அறிவிக்கப் பட்டுள்ளனர்.

## பீகார்-கூட்ட நெரிசல்

பீகார் மாநிலம் லக்கிசராய் மாவட்டத்தில், இன்று கூட்ட நெரிசல் சம்பவத்திலும், மேற்கு வங்க மாநிலம், பீர்பும் மாவட்டத்தில் உள்ள தாராபீட் பகுதியில், தீவிபத்திலும்,

பல உயிர்கள் பலியானது குறித்து, பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

தாராபிட் தீவிபத்தில் உயிர் இழந்தவர்களுக்கு, பிரதமரின் தேசிய நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகையும், காயம் அடைந்தவர்களுக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் உதவியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

லக்கிசராய் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு, தலா 4 லட்சம் ரூபாய் வழங்க, பீகார் முதலமைச்சர் திரு சாம்ராட் சவுத்ரி, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். லக்கிசாராய் மாவட்டத்தில் உள்ள அசோக்தாம் ஆலயத்தில், இன்று ஜலாபிஷேக விழாவின் போது எற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவத்தில், 7 பெண்கள் உயிர் இழந்தனர். மேலும் 10 பேர் மோசமாக காயம் அடைந்து, மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்குவங்க மாநிலம் தாராபீட் பகுதியில், இன்று அதிகாலை, 4 மாடி ஓட்டல் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில், குறைந்தது 5 பேர் உயிர் இழந்தனர். மேலும் பலர் காயம் அடைந்தனர்.

## அமித் □ ா

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, சுதந்திர தினத்திற்கு முன்பாக, 14 மாநிலங்களுக்கு உட்பட்ட பல்வேறு இடங்களில் மேற்கொண்ட விரிவான நடவடிக்கைகளில், ஐஎஸ்ஐ ஆதரவுடன் கூடிய ஷாஜத் பட்டி தீவிரவாதக் கும்பலை முற்றிலுமாக அழித்து, தீவிரவாதத் தாக்குதல் குறித்த சதித் திட்டங்களை முறியடித்து இருப்பதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். இக்கும்பலை சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை, ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் பாதுகாப்பு படையினர் கைது செய்து, பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட வெடி குண்டுகள், ஆயுதங்கள், மற்றும், வேவு பார்ப்பதற்கான சிசிடிவி

கேமராக்களைக் கைப் பற்றி இருப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், அவர் தெரிவித்துள்ளார். தீவிரவாதத்தை கொஞ்சம் கூட சகித்துக் கொள்ள முடியாது என்பதான இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு, இதுவே சிறந்த உதாரணம் என்றும் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

## நிர்மலா

விக்சித் பாரத் இலக்கை எட்ட ஏதுவாக, வங்கித் துறையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆராய, உயர் அதிகாரக் குழு, விரைவில் அமைக்கப்படும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்......

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், இன்று புதுடெல்லியில், பொதுத் துறை வங்கிகளுக்கு இடையிலான, 2 நாள் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசினார். உயர் அதிகாரக் குழுவின் பரிசீலனைக்கு ஏற்ற பல்வேறு கருத்துக்கள், நடப்பு மாநாட்டில் வெளியாகும் எனத், தாம் நம்புவதாக கூறினார். இந்திய வங்கிகள் தற்போது, வலுவான நிலையில் உள்ளதாகவும், வங்கிகளின் வாராக் கடன்கள், முன் எப்போதும் இல்லாத அளவில் குறைந்து இருப்பதால், எதிர்கால சீர்திருத்தங்களுக்கு, வலுவான அடித்தளம் கிடைத்திருப்பதாகவும், அவர் குறிப்பிட்டார். பொதுத் துறை வங்கிகள், மற்றும், நிதி நிறுவனங்களின் உயர்நிலை நிர்வாகிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டு, இந்திய வங்கி மற்றும் நிதித் துறையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள் குறித்து விவாதிக்கிறார்கள்.

## அனுபவ் விருது

பணியில் இருந்து ஓய்வு பெறும் மத்திய அரசு ஊழியர்கள், பொது துறை ஊழியர்கள் மற்றும் வங்கி ஊழியர்கள், அரசின் அனுபவ் இணையதளத்தில் பகிர்ந்து கொண்ட தகவல்களின் அடிப்படையில் அனுபவ் விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 15

பேருக்கு, மத்திய பணியாளர் மற்றும் பொது மக்கள் குறை தீர்ப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், இன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், விருதுகளை வழங்கி சிறப்பித்தார். நிர்வாக நடைமுறைகளில் தொழில் நுட்பத்தின் பயன்பாடு, பழைய விதி முறைகளுக்கு மாற்றாக புதிய விதிமுறைகளின் உருவாக்கம் , மற்றும், பாஸ்போர்ட்ட சேவைக் கேந்திரம் போன்ற அரசின் முக்கிய திட்டங்களில் சிறப்பாக பங்களித்தவர்கள், அனுபவ் விருதுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். தேசிய அளவிலான 5-ஆம் கட்ட டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் இயக்கம் குறித்த, பென்சன் மித்ரா கையேடும், விழாவின் போது வெளியிடப்பட்டது.

## வேளாண்மை

பிரதமர் திரு நரேந்திர மோடி, சுதந்திர தின உரையில் வெளியிட்ட, சக்தியின் 7 தாரைகள், நாட்டின் வேளாண் வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் முக்கிய வழிகாட்டியாக அமையும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறி உள்ளார். பிரதமரின் இந்த தொலைநோக்கு பார்வையை, மக்களை மையமாகக் கொண்ட திட்டங்கள், திறம்பட்ட அமலாக்கம், மற்றும், வெளிப்படையான கண்காணிப்பு நடைமுறைகள் மூலம் செயலாக மாற்ற, அரசு பாடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்....

பிரதமர் அறிவித்த, சக்தியின் 7 தாரைகளில், வேளாண் துறை மற்றும் உணவு உற்பத்தியை வலுப்படுத்துதல், உலக நெருக்கடிகளால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் சலுகை விலையில் உரம் வழங்குதல், உணவு பதனீட்டு துறையின் விரிவாக்கத்திற்கு முன்னுரிமை அளித்தல் உள்ளிட்ட அம்சங்கள் அடங்கும். சக்தியின் 7 தாரைகள் குறித்த உறுதி ஏற்பு நிகழ்ச்சி, மத்திய வேளாண் அமைச்சர் தலைமையில், புதுடெல்லி பூசா வளாகத்தில் நாளை நடைபெற உள்ளது. புதிய இலக்குகள் தொடர்பாக பல்வேறு துறையினர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், லாக்பதி

தீதி திட்டத்தின் விரிவாக்கம், மற்றும், விவசாயிகளின் நலன் தொடர்பான பல்வேறு முடிவுகளுக்கு, இந்நிகழ்ச்சியின் போது முக்கிய கவனம் செலுத்தப்படும். 2047-ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்துவதில், வேளாண்மை உள்ளிட்ட ஊரகத் துறைகளின் பங்களிப்பை அதிகரிப்பது குறித்த இந்நிகழ்ச்சியில், முற்போக்கு விவசாயிகள், லட்சாதிபதி சகோதரிகள், மற்றும், வேளாண் பதனீட்டுப் பொருட்களின் எற்றுமதியாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

## ரங்கசாமி-நமச்சிவாயம்

புதுச்சேரியில், சோலைநகர் அரசு சிபிஎஸ்இ தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள் மற்றும் வழிபாட்டு கூடத்தை முதலமைச்சர் திருரங்கசாமி தொடக்கி வைத்தார். அரசு பள்ளி மாணவர்கள் நன்கு படித்து வாழ்வில் உயர வேண்டும் என்றும் இதற்கு வழிகாட்டியாக ஆசிரியர்கள் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கல்வி அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு வையாபுரி மணிகண்டன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். திரு நமச்சிவாயம் இன்று பாரதிதாசன் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு, சென்டாக் மாணவர் சேர்க்கைக்கான ஒருங்கிணைந்த சான்றிதழ்களை வழங்கினார். புதுச்சேரியில் கல்லூரி மாணவ-மாணவிகளுக்கும் சிறப்பு பேருந்து இயக்கப்படும் என அவர் தெரிவித்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு வையாபுரி மணிகண்டன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

## காரைக்கால் ஒத்திவைப்பு

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நாளை 18-ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த பொது மக்கள் குறை தீர்ப்பு முகாம் வரும் 20-ஆம் தேதி வியாழக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நிர்வாக காரணங்களால் இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளதாக காரைக்கால் மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## வானிலை

இன்று, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தின் ஒரு சில இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் இதரப் பகுதிகளில், லேசான மழை பெய்யக் கூடும் என்றும், வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வரும் 23-ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். .இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, குமரி மாவட்டம் தர்மபுரத்தில், 4 செமீ மழை பதிவாகி உள்ளது.

## கிரிக்கெட்

ஆடவர் கிரிக்கெட்டில் இலங்கை-இந்தியா அணிகளுக்கு இடையே, இலங்கையின் கல்லே நகரில் நடைபெறும், முதலாவது டெஸ்ட் போட்டியின் 3-ஆம் நாளான இன்று இலங்கை அணி, 284 ரன்னுக்கு முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்த நிலையில், மழை வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு, குறிப்பிட்ட நேரத்திற்கு சற்று முன்பாகவே, இன்றைய ஆட்டம் முடித்துக் கொள்ளப்பட்டது. முன்னதாக இந்திய அணி, 462 ரன்னுக்கு, தனது முதல் இன்னிங்ஸ் ஆட்டத்தை இழந்தது.

## காவிரி நீதிமன்றம்

தமிழகத்திற்கான நீர் வெளியீடு குறித்த காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் உத்தரவிற்கு இணங்கும்படி, கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தி உள்ளது. இதுதொடர்பான நடப்பு நிலவரங்கள் குறித்து, அறிக்கை ஒன்றை

ஆணையம் தாக்கல் செய்ய வேண்டுமென, நீதிபதிகள் திரு விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று உத்தரவிட்டது. தமிழக அரசு தாக்கல் செய்திருந்த மனு ஒன்றின் மீது நீதிமன்றத்தின் இந்த உத்தரவு வெளியாகி உள்ளது. இந்த வழக்கில் அடுத்த கட்ட விசாரணை, வரும் 24-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

Rss/Nar/Rp-17.8.2026

மீண்டும் தலைப்புச் செய்திகள்

சுயமாக சிந்தப்பதும் அணியாக செயல்படுவதுமே, கல்வியின் சரியான அளவீடுகள் என்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

வங்கித் துறையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆராய, உயர் அதிகாரக் குழு, விரைவில் அமைக்கப்படும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அறிவித்துள்ள சக்தியின் 7 தாரைகள், வேளாண் வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் முக்கிய வழிகாட்டியாக அமையும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறி உள்ளார்.

சோலைநகர் அரசு சிபிஎஸ்இ தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள் மற்றும் வழிபாட்டு கூடத்தை, முதலமைச்சர் திருரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

தலைப்புச் செய்திகள்

சுயமாக சிந்தப்பதும் அணியாக செயல்படுவதுமே, கல்வியின் சரியான அளவீடுகள் என்று, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறி உள்ளார்.

வங்கித் துறையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் குறித்து ஆராய, உயர் அதிகாரக் குழு, விரைவில் அமைக்கப்படும் என, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அறிவித்துள்ள சக்தியின் 7 தாரைகள், வேளாண் வளர்ச்சி மற்றும் ஊரக வளர்ச்சியை துரிதப்படுத்துவதில் முக்கிய வழிகாட்டியாக அமையும் என, மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறி உள்ளார்.

சோலைநகர் அரசு சிபிஎஸ்இ தொடக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள் மற்றும் வழிபாட்டு கூடத்தை, முதலமைச்சர் திருரங்கசாமி இன்று திறந்து வைத்தார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------